# ஜென்னி-சேப்பியன்ஸ்

பா.பாரத்

காலம் 2100-ம் ஆண்டு, இந்தியாவின் ஒரு கிராமத்தில் இருந்து, வர்ஷினி தன்னுடைய முடியை சரிசெய்து கிளம்பி கொண்டிருந்தாள், கதவின் அருகே செல்ல ஏதோ ஞாபகம் வந்தது வேகவேகமாக தேட தொடங்கினாள்.

வீடு என்பதை விட ஒரு அறை என்று தான் கூற வேண்டும், ஒற்றை கண்டெய்னரை அவள் தனது வீடாக மாற்றியிருந்தாள். எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் கழிவுகளின் இடையில் இருந்து முதுகில் போடும் பையினை எடுத்தாள், கதவின் அருகில் மீண்டும் செல்லும்போது அந்த அறையின் மூன்று விளக்குகளும் விட்டு,விட்டு எறிந்தன. கண்கள் விரிய புன்னகையுடன் எதிர்பார்த்தது நடந்தது போல அந்த அறையின் இடது பக்கத்தினை பார்த்து திரும்பினாள், அவள் தயார் செய்து கொண்டிருந்த பெண் எந்திரம்(ரோபோட்) எழுந்து அமர்ந்திருந்தது.

"ஜென்னி" என்றபடி ஓடிச்சென்று அதை கட்டிகொண்டாள். ஜென்னியும் கட்டி கொண்டது. பலமுறை செய்த முயற்சிக்கு பின் கிடைத்த வெற்றி ஜென்னி, வன்ஷினிக்கு அவள் தாயாகி போனது போன்ற உணர்வு புல்லரிக்க, கண்ணீரால் அந்த புற்களை நனைத்து கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் உயிர் பெற்றோம் என்று எழுந்து எழுந்து வர்ஷினி முகத்தினை பார்த்து பின் தோற்ற ஜென்னிக்கு இப்பொழுது பிறந்தது போன்ற உணர்வு மேலேறியது, தன் தாயையே கட்டி கொண்டது. இருவரும் அன்பிற்குள் அடைபட்டு நின்றனர்.

வர்ஷினி கைக்கடிகாரம் எச்சரிக்கை தர "வா,வா" என்றபடி ஜென்னி கையை பிடித்து இழுத்தபடி சென்றாள் வர்ஷினி.கதவின் அருகே இருந்த சிகப்பு துணியால் ஜென்னி முகம் தெரியாதவாறு மூடி விட்டாள். ஜென்னி ஆணா? பெண்ணா? என தெரியாதவாறு அதன் கவச உடை அமைக்கப்பட்டிருந்தது. பருவநிலை மாற்றங்கள் மாறி, மாறி வந்ததால் மதியம் 2 மணிக்கே அன்று இருட்டி விட்டது. தெருவெங்கும் பளீர் என விளக்குகள் வெள்ளை பல் இளித்தன. ஜென்னியால் வர்ஷினி வேகத்தின் அர்த்தத்தை புரிய முடியவில்லை, ஜென்னி நின்றது, காற்று பலமாக வீச மணல் துகள்கள் அவர்கள் முகங்களை முத்தமிட்டு கடந்தது, அர்த்தம் புரிந்தவளாய் " நியாய விலை நிலையம்" போகின்றோம் என்றாள் வர்ஷினி.

ஜென்னியின் செயற்கை நுண்ணறிவு. "இந்த தெருவின் வழியாக சென்றால், மூன்று நிமிடம் தான்" என அவளின் வலது புறம் இருந்த தெருவினை கைகாட்டியது. "எனக்கு தெரியும், நீ நிக்காமல் வா என்றபடி அவளை இழுத்து கொண்டு சென்றாள் வர்ஷினி. சூரிய ஒளி மின்சார சுடுகாட்டின் அருகில் இருந்த ஒத்தையடி பாதையின் பக்கமாக சென்று நியாய விலை நிலையத்தை இருபது நிமிடத்தில் இருவரும் அடைந்தனர். அவ்வளவு கூட்டம் அங்கு. காரணம், இன்றுடன் இலவசங்களை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அந்த கூட்டத்திலும் போட்டிருந்த துணியை விலக்காமல் போராடி பசி அடக்கும் மாத்திரை, தூய தண்ணீர் பாட்டில், முகக்கவசம் என இன்னும் மற்றவற்றை வாங்கி கொண்டு வந்தாள் வர்ஷினி, ஜென்னி அங்கிருந்த கண்டெய்னர் வீடுகள், இடிந்தும், இடியாமலும் இருக்கும் வீடுகள், வீடுகளின் முன் நிறுத்தப்பட்டிருந்த வித,விதமான வான் ஊர்திகள், சாலை துப்புரவு பணியில் இருந்து வண்டி ஓட்டுனர் வரை இருக்கும் ஆண் எந்திரர்களை அவ்வப்போது பறக்கும் தூசி காற்றின் நடுவே அது கவனித்து கொண்டிருந்தது. வர்ஷினி அவளை இழுத்து கொண்டு வேகவேகமாக கிளம்ப முயன்றாள்.



தென்காசி மாவட்டம் பொடியனூரில் பிறந்த இவர் தற்போது கட்டிட பொறியாளராக சேலம் மாவட்டம் எடப்பாடியில் பணிபுரிந்து வருகிறார். குறும் படங்கள் மற்றும் திரைப்படங்களுக்கும் கதைகள் எழுதியுள்ளார். முன்னதாக "அகாழிகன்" மற்றும் "இரு காதல் பக்கங்கள்" எனும் இரு குறு நாவலினையும், "இவர்களும் வாழ்ந்தார்கள்" என்ற முழு நீள நாவலினையும் எழுதியுள்ளார். "அனைத்து உயிரிகளுக்கும் சம உரிமை, அதுவே உலகம்" என முழங்குபவர். சாகும் வரை கலைஞனாக இருந்து பேனா ஏந்தி, சமூக மாற்றம் செய்வது என்றுமே சந்தோஷம் என்ற துடிப்பு கொண்டவர்.

சுடுகாட்டினை நோக்கி ஐம்பது வயதான முதியவரின் சவ ஊர்வலம் சென்றது. வர்ஷினிக்கு உள்ளுக்குள் அழுகை பொங்கியது, வேறு வழியின்றி தெருக்களின் வழியே நடக்க தொடங்கினாள், காற்றும் பலமாக வீச தொடங்கியது, ஜென்னியின் துணியினை இறுக்கமாக கட்டிவிட்டாள் வர்ஷினி, அதற்குள் அவளின் முகத்தினை மூடி இருந்த துணி காற்றில் பறந்தது, வேகவேகமாக கீழே குனிந்தபடி கண்ணீரை துடைத்தபடி நடந்தாள்,

அந்த தெருவின் வழியே சென்று கொண்டிருந்த ஒவ்வொரு கண்களும் இவளை வித்தியாசமாக பார்க்க தொடங்கியது, அந்த கஃபேயின் வெளிச்சம் வர்ஷினி முகத்தில் பட அழுகை பீறிட்டது, வாயை பொத்திகொண்டு, நீர்வழிய நடந்தாள், அங்கிருந்த சில வாலிபர்கள் இவளை அடையாளம் கண்டனர், "ஏய் மொட்ட ரோசா" என்றனர், சிலர்" டேய் அது "கொட்ட, கொட்ட ரோசா" என சத்தமாக சிரித்தனர். அவர்கள் இருவரையும் பின் தொடர்ந்து கேலிகள் செய்ய தொடங்கினர். ஜென்னி அவர்களை எதுவும் செய்து விட கூடாதென அதன் கையினை இறுக பற்றி இறுகிய இதயத்துடன் நடந்தாள் வர்ஷினி. பின்னால் ஒருவன் " இது யாரு புது ஆளா?" என்றான். அவன் சத்தம் தூரத்தில் இருந்தது இவர்கள் கண்டெய்னருக்குள் இருந்தனர், கதவின் அருகேயே முட்டியிட்டு சத்தமாக கதறி அழுதாள் வர்ஷினி, ஜென்னிக்கு என்ன செய்வது என்பது தெரியவில்லை இறுக அணைத்து கொண்டாள்.

என்னாச்சி என ஜென்னிக்கு கேட்க ஆசை, இந்த நேரத்தில் கேள்விகள் வேண்டாம் ஆறுதலாய் தோள்கள் இருந்தால் போதுமென அவள் செயற்கை நுண்ணறிவு கூறியது. அதற்குள் வர்ஷினி "ஜீன் மாறுபாடு என் தப்பா, திருநங்கைனா தப்புதானா?, பரிணாம வளர்ச்சி அடஞ்ச குரங்கு தான மனுசன், இத ஏன் பரிணாம வளர்ச்சியா பாக்க மாட்றான, வேலையே இல்லாம அலஞ்சேன் அந்த கஃபே-பையன் தான் எனக்கு வேல கொடுத்தான், நாங்க ரெண்டு பேரும் நல்ல நண்பர்கள் தான், கடையும் நல்லா போச்சி நான் சேர்ந்த அப்புறம், நாங்க ரெண்டு பேரும் தப்பா பழகுறோம், எங்க பழக்க, வழக்கத்தால அடுத்த தலைமுறை பாதிக்கும்னு ஏதேதோ காரணம் சொன்னாங்க கடை வளர்ச்சி பிடிக்காதவங்க, அந்த கடைகார பையன் அப்பவும் எனக்கு அவ்ளோ துணையா நட்போட இருந்தான், கடைசியில நா அவன வச்சிருக்கேனு சொல்லி அவன் குடும்பத்த கூட்டி வந்து என்ன அடிச்சி, தகாத வார்த்தையால திட்டி அசிங்கபடுத்துனாங்க, கடவுளே! என் பொறப்புக்கு நா என்ன பண்ணுவேன், இவங்க நாங்க வேலைக்கு போனா அசிங்க படுத்துறாங்க, அடிக்றாங்க, இந்த பொறப்பு எவ்ளோ படிச்சாலும் ரோட்டோரம் நின்னு கைதட்டி காசு வாங்கதானு நினைச்சாங்களா? என ஏங்கினாள்.

ஜென்னி, ஜென்னி பாரு நா யாரும் பன்னாதத பன்னிட்டேன், நீ தான் என் வெற்றி , நீ தான் எங்க அறிவு, மூளை என்னனு காட்ட போற, உன்னால பறக்க முடியும், பறக்ற எந்திரத்த காட்றேன், விஞ்ஞானிங்ற பட்டம் வரட்டும் வர்ஷினிங்ற பெயர் மட்டும்தான் இருக்கும், ஒத்த ரோசா, பொட்ட ரோசா-லா இருக்காது" என அழுகையை துடைத்து ஜென்னி முகத்தினை ஆத்மார்த்தமாய் பார்த்தாள். ஜென்னி" எல்லாமே கண்டிப்பா மாறும், நா இருக்கிறேன்" என கூறி கொண்டிருக்கும் போதே மின்சாரம் தடைபட்டது.

இலவச மின்சாரம் என்பதால் இலவச நிறுத்தத்தின் காரணமாக சாயங்காலம் ஆறு மணியோடு அதுவும் நின்று போனது. வர்ஷினி இருட்டில் ஒருவாறு தேடி வட்டமாய் இருந்த காந்த விளக்கினை எரிய செய்தாள். வெளிச்சத்தில் அப்பொழுதுதான் கவனித்தாள் ஜென்னி கீழே விழுந்து கிடந்தது, அதற்கு தேவையான எரிசக்தி அளவினை வர்ஷினி கவனிக்கவில்லை. ஜென்னி கவலைக்கிடமான நிலையில் படுக்கையில் கிடத்தபட்டது, மற்றவர்கள் வீட்டில் இலவச மின்சாரம் இல்லை. ஆதலால், அவர்கள் வீடுகளில் மின்சாரம் இருந்தது, அவர்களிடம் சென்று கேட்க யோசித்து கொண்டிருந்தாள் வர்ஷினி, இருபது மணி நேரத்திற்குள் ஜென்னிக்கு எரிசக்தி வேண்டும் இல்லை இறப்புதான்,

.

ஜென்னி தொழில்நுட்பம் இயங்காது. வெளியே செல்ல எழுந்தவளின் கையினை பிடித்து அமர செய்தது ஜென்னி, வர்ஷினி கையினை பிடித்தபடி அந்த வெளிர் சிகப்பு நிற ஒளியில் அவள் அன்பினை நேசித்து கொண்டிருந்தது ஜென்னி, "நீ யாரிடமும் உனக்காகவோ, எனக்காகவோ கெஞ்ச வேண்டாம்" என்றபடி வர்ஷினி முகத்தினை அது ஆழ்ந்து பார்த்து கொண்டிருந்தது

நேரங்கள் கடந்து கொண்டிருக்க மௌனங்களை விலக்கி இறக்கும் முன் கேட்பதை போன்று ஜென்னி திக்கி,திக்கி கேட்டது " ஏன் முகத்துல துணிய சுத்தி என்ன வெளிய கூட்டி போன", வர்ஷினிக்கு உடம்பெல்லாம் கூசியது, வாந்தி வருவது போல இருந்தது, ஆன்மாவினை அடக்கி தட்டுத்தடுமாறி தொடங்கினாள்,

" ஆண் எந்திரர்களை எங்கும் காணலாம், எங்கும் ஆண் மயம் தான் பெண் எந்திரங்கள் வீட்டு வேலைகளுக்கும், படுக்கை அறை வேலைகளுக்கும் மட்டுமே பயன்படுத்த படுகின்றன, உன்னை அவர்கள் கண்டால் தூக்கி செல்வார்கள் சபலம் நீக்க உன்னிடம் எதுவும் இல்லை என்றால் தூக்கி எறிவார்கள் என்னை போல" என்றபடி தள்ளி சென்று வாந்தி எடுத்தாள்.

கண்ணீரோடு திரும்பி வந்து பார்க்கையில் ஜென்னி கண்களில் கருப்பு நிற எண்ணெய் வடிந்திருந்தது, ஜென்னி அணைந்திருந்தாள். வர்ஷினி அதன் கைகளை மாரோடு கட்டியபடி கால்,கைகளை மடக்கியபடி அதன் அருகில் படுத்திருந்தாள். சூரியன் உதித்ததும் சூரிய ஒளி மூலம் எரிசக்தி கொடுக்கலாம் என விடியலுக்காக காத்திருந்தாள்.

இலவசம் வேண்டாம், வேண்டாம் னு சொல்வானுங்க அவனுங்ககிட்ட எல்லாமே இருக்கும், இல்லாதவங்க எப்டி வாழ்றதாம். என இருண்ட கண்டெய்னருக்குள் தன் விடியலுக்காக காத்திருந்தாள்..

